2025 – ஜீலை மாதம் 31– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 230 / 2023*

*2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 31– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, முத்துசாமி |
| தகப்பனார் பெயர் | : | ராமு |
| ஊர் | : | தெற்கு மாதவி கிராமம், சிறுகன்பூர் அஞ்சல், |
| வட்டம் | : | ஆலத்தூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | -- |
| வயது | : | 65 |

**தேதி: 31.07.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பில் ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

**எனது சார்பாக:–**

1).24.07.2023–ம் தேதியன்று நடைபெற்ற விபத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2). 27.04.2023–ம் தேதி முதல் 29.04.2023–ம் தேதி வரை நான் பெரம்பலூர் அரசு தலைமையிட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

3). எனது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.3,** ஆக தாக்கல் செய்கின்றேன்.

**( மேற்படி ம.சா.ஆ.2 சான்றாவணம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

விபத்து சமயத்தில் நான் பேருந்தில் பயணம் செய்தற்கான பயணச்சீட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் நான் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. போலீசார் தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கையில் என்னுடைய பெயர் உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் பயணம் செய்த பேருந்தில் பின்பக்கம் அமர்ந்து பயணம் செய்தேன். பேருந்து இடது பக்கம் இழுத்து சென்று சாய்ந்து விபத்து ஏற்பட்ட பிறகு தான் நான் விபத்து ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேன் என்றால் நான் மயக்கமாகி விட்டேன் எனக்கு தெரியவில்லை. பேருந்து சென்று கொண்டிருந்த போது ஒரு லாரி குறுக்கே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் நான் பேருந்தின் பின்புறம் அமர்ந்து இருந்ததால் அந்த விபரம் எனக்கு தெரியாது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், அவை சிகிச்சையின் போதே பூரண குணம் அடைந்து விட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றேன். எனக்கு காயச்சான்றிதழ் எதுவும் வழங்கப்படவில்லை. விபத்தினால் எனக்கு எவ்வித வருமான இழப்பு ஏற்படவில்லையென்றும்,

மருத்துவ செலவும் ஏற்படவில்லையென்றும் சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகமானது என்றும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– கே. முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**